# ஜனவரி – 14 – திங்கள்

## குழந்தை இயேசு

## "என் பின்னேவாருங்கள்" (மாற் 1:17)

**முதல் வாசகம் : (வாசகம் வேறுபடலாம்)**

**ஏபிரேயர் 1 : 1 – 6**

பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார் இவர் வழியாக உலகங்களைப் படைத்தார். கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கும் இவர், தம் வல்லமைமிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். மக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்தியபின், விண்ணகத்தில் இவர் பெருமைமிக்க கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். இவ்வாறு இறைமகன் வான தூதரைவிடச் சிறந்ததொரு பெயரை உரிமைப்பேறாகப் பெற்றார். அந்நிலைக்கு ஏற்ப அவர்களைவிட இவர் மேன்மை அடைந்தார். ஏனெனில், கடவுள் வானதூதர் எவரிடமாவது "நீ என் மைந்தர் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்" என்றும், "நான் அவருக்குத் தந்தையாயிருப்பேன், அவர் எனக்கு மகனாயிருப்பார்" என்றும் எப்போதாவது கூறியதுண்டா? மேலும் அவர் தம் முதற்பேறான இவரை உலகிற்கு அனுப்பியபோது, "கடவுளின் தூதர் அனைவரும் அவரை வழிபடுவார்களாக" என்றார்.

**பதில்பாடல்** : அனைத்துத் தெய்வங்களே ஆண்டவரைத் தாழ்ந்து பணியுங்கள்

**நற்செய்தி : (வாசகம் வேறுபடலாம்)**

**மாற்கு 1 : 14 - 20**

அக்காலத்தில், யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அவர் கூறினார். அவர் கலிலேயக் கடலோரமாய்ச் சென்றபோது சீமோனையும் அவர் சகோதரரான அந்திரேயாவையும் கண்டார். மீனவர்களான அவர்கள் கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள்.
இயேசு அவர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். பின்னர், சற்று அப்பால் சென்றபோது செபதேயுவின் மகன் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் இயேசு கண்டார். அவர்கள் படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே இயேசு அவர்களையும் அழைத்தார். அவர்களும் தங்கள் தந்தை செபதேயுவைக் கூலியாள்களோடு படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள்.

**தியானம்:** யேசுவின் வழியை ஆயத்தம் செய்ய வந்தவர் யோவான். அவரின் பணி அவரின் கைதோடு முடியப்போகின்றது என்பது யேசுவிற்கு தெரியும். தமது பணியின் ஆரம்பமாக இன்றைய நற்செய்தியில் தமது முதல் சீடர்களை அழைப்பதை நாம் காணலாம். அழைப்பு பெற்றவர்கள் உடனேயே எந்த தயக்கமும் இன்றி அவர் பின் செல்கின்றார்கள். தமது தொழிலைப் பற்றியோ,குடும்பத்தைப் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. அப்படி எம்மால் கடவுளின் அழைப்பிற்கு பதில் கூற முடியுமா? இன்று பலவிதமான உலககவர்ச்சிகளும், மாயைகளும் எம்மை ஆட்டிப் படைக்கின்றன. நாம் அவற்றின் பின் ஓடுகின்றோம். ஆனால் உண்மையான கடவுளை நம்ப, தேடமறக்கின்றோம். ஆடம்பரமான எமது வாழ்விற்கு தேவையானதற்காக ஓய்வின்றி உழைக்கின்றோம். இதனால் நாம் காணப்போவது என்ன? ஒரு குறுகியகால சந்தோஷமே! இன்று வயோதிப காலத்தில் இருப்பவர்கள், தாம் இளமையில் செய்ததை நினைத்து மனம் வருந்துகிறார்கள். தாம் செய்த தவறுகளால் தான் துன்பப் படுகின்றோம் என்று நினைக்கின்றர்கள். அவ்வாறான நிலை எமக்கும் வேண்டாமே. கடவுள் தந்த இந்த குறுகியகால வாழ்வை ஏன் நாம் அவருக்கு உரியமுறையில் செலவிட முடியாது? ஒவ்வொருவினாடியும் அவர் எமக்கு தருகின்ற கொடை. இன்று யாரும் எதிபாராமலே பலசம்பவங்கள் நடைபெறுகின்றன. மரணம், விபத்து, கொடிய நோய் எல்லாம் கண்ணிமைக்கும் நொடிகளில் நம்மை தாக்குகின்றது. எனவே நாம் எப்போதும் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். எமது வாழ்வால், சொல்லால், செயலால் நாம் யேசுவைப் பின்பற்ற முடியும். நம்மால் முடியுமா?